# திக்கெட்டும் புகழொலிக்கும், திராவிடப் பெருவேந்தர் தளபதி வாழ்க!



ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒரு அறிஞன் தோன்றுவான் என்பது ஒரு ஆங்கிலப் பழமொழி.

ஆனால் நமது தென்னகத்தில் குறிப்பாக, சிறப்பாக தமிழகத்தில் தலைமுறைக்கு ஒரு தலைவரென வந்த வண்ணம் இருந்தனர்.

அவர்கள் தலைமுறைகளைக் கடந்த தலைவர்களாக இன்னமும் தங்களது தத்துவங்களால், சிந்தனைகளால், சிகரம் தொட்ட சலிக்காத உழைப்பால் நம்மை வழிநடத்தி வருகின்றனர்.

தந்தை பெரியார்

பேரறிஞர் அண்ணா

தலைவர் கலைஞர்

போன்ற மாபெரும் சகாப்தங்கள் நமக்கு கிடைத்த காவல் அரண்கள்.

அந்த வரிசையில் நான்காம் தலைமுறையாக, நாடுபோற்றும் நல்லாட்சி நாயகராக, ஒவ்வொரு வீடும் போற்றும் விடியலாட்சி தந்தவராக, இளைஞர்கள், மாணவர்கள் வாழ்வில் விளக்கேற்றி வைத்தவராக, கழகம் காக்கும் கம்பீரத்தலைவராக விளங்கும் திராவிடப் பேரரசர், தளபதியவர்கள் திகழ்கிறார்.

இயக்கத்தலைமை ஏற்ற எட்டாண்டுகளில் எத்தனை இடர்கள், அழுத்தம், அச்சுறுத்தல்கள், சனாதன சவால்கள் என இவையனைத்தையும் தன்னந்தனியராக நின்று எதிர்ப்பின் நெற்றிப் பொட்டில் அடித்து சிதறவிட்டு, ஜெர்மானிய அடால்ப் ஹிட்லர் சொன்னது போல், " எத்தனை பக்கம் எதிரிகள் சூழ்ந்தாலும், அத்தனைப் பக்கமும் திருப்பித்தாக்கு " என சமரசமற்ற கொள்கையுடன் களத்தில் நிற்கிறார் நமது தலைவர் தளபதியவர்கள்.

தலைவர் கலைஞர் அவர்களுக்குப் பின் பெரும் சுமையாய் கழகத் தலைமை பொறுப்பை ஏற்றுக்கொண்டவர், தொடுத்தப் போரிலெல்லாம் தோல்வியே காணாத மாவீரராக கழகத்தை வழிநடத்தி வெற்றி வலம் வருகிறார்.

வலம்புரி ஜான் ஒரு முறை தலைவர் கலைஞரைப்பற்றி குறிப்பிடுகையில் காங்கிரஸ் இயக்கத்தில் நேரு மறைந்த பிறகு AFTER NEHRU WHO? என்றக் கேள்வி எழுந்தது.

அதுபோல அண்ணாவின் மறைவிற்குப் பிறகு யார்? என்றக் கேள்வி தமிழ்நாட்டு மக்களால், ஏன்? டெல்லிப் பட்டணத்து அரசியல் தலைவர்கள், ஆளுங்கட்சி தலைமை வரை அச்ச மேகம் சூழ்ந்திருந்தது.

அன்று கலைஞரெனும் மகத்தான தலைவரை கழகம் அடையாளம் கண்டது. _ என்று குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் தலைவர் கலைஞருக்குப் பின் யாரென்ற கேள்வி இங்கு எழவே இல்லை.

தனது பதினான்காம் வயதில் கோபாலபுரம் இளைஞர் மன்றம் எற்படுத்தி, இளைஞர்களை சேர்த்து, அரவணைத்து, அண்ணாவை கண்டு, ஆலோசனை, அறிவுரைகள் பெற்று, "என்ன உன் அப்பனைப் போன்றே பிடிவாதக்காரனாக இருக்கிறாயே! " என அண்ணாவால் அதிசயத்துப் பார்க்கப் பட்டு, எம். ஜி. ஆரை இயக்க நிகழ்ச்சிக்கு அழைத்து, தலைவர் கலைஞர் போன்றே வேடம் தரித்து, தலைவர் கலைஞர் கையாலேயே கணையாழி பரிசு பெற்று, பெருந்தலைவர் காமராசர் அவர்களின் ஆசியோடு இல்லறமேற்று,டெல்லியின் நாசக்கார கரங்களால் நான்கே மாதத்தில் நெருக்கடி நிலை புகுந்து, உதை பட்டு, மிதிபட்டு, வதைபட்டு, ஓராண்டைக் கடந்து, 1980 ல் இளைஞரணி அமைப்பாளர்களில் ஒருவராக ஓய்வின்றிப் பணியாற்றி, 1989 ல் ஆயிரம் விளக்கில் வெற்றி பெற்று,சட்டமன்ற உறுப்பினராக, 1996 ல் சென்னை மாநகராட்சிக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மேயராக, 2006 உள்ளாட்சித் துறை அமைச்சராக, 2009 ல் துணை முதல்வரெனப் பணியாற்றி, வெற்றி, தோல்வி என எதிலும் நிலைமாறாமல் நீண்ட நெடிய அனுபவம் மிக்க அரசியல் சாதுரியம் நிறைந்தவராய் நமக்கு கிடைத்தார்.



**வழக்கறிஞர்**
**வெ.அன்புவாணன்**
*கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர்*

ஆட்சித்தலைமை ஏற்று, அரிய பல சாதனைகளை செய்பவர், இந்த ஐந்தாண்டுகளில் தீட்டிய திட்டங்கள், அவரின் கடின உழைப்பு, இவற்றை எண்ணிப் பார்த்தால், திகைப்பே மேலோங்கி நிற்கிறது.

அரசு எந்திரம் இருக்கிறது. அதிகாரிகள் சூழ நிற்கின்றனர். கல்வியல், பொருளாதார அறிஞர்கள் இருக்கிறார். ஓடோடி உழைத்திட உறுதுணையாக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் இருக்கிறார்.

மந்திரிக்கழகு வரும் பொருளுரைத்தல் என்பதற்கேற்ப முப்பதுக்கும் குறையாத அமைச்சரவை சகாக்கள் இருக்கிறார்கள்.

ஆனாலும், ஆனாலும் அவர் ஒவ்வொரு நாளும் சுழன்ற படியே நிற்கிறார். சற்றே தூரமான இடங்களுக்கு விமானத்தில் சக பயணியரோடு பயணிக்கிறார்.

அருகாமை இடத்திற்கு புகைவண்டி பயணம்.

அண்மை நிகழ்ச்சிகளுக்கு காரில் பயணம்.

பல நலத்திட்ட உதவிகளுக்கு நடந்தபடியே கடமையாற்றுகிறார்.

தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டபடி, " உழைப்பு! உழைப்பு! தான் தளபதி என்பதைப்போல் ஓய்வின்றி உழைக்கிறார்.

அரசியல் சதுரங்கத்தில், டெல்லியின் ஆடுபுலி ஆட்டங்களில் என்றும் வெட்டு படாமல் எதிரிகளின் தலையில் குட்டி, இனி இவரிடம் எட்டியே நிற்கவேண்டும் என ஏகாதிபத்திய சக்திகள் அஞ்சிடும் வண்ணம் தனது அரசியல் அடிகளை நகர்த்துகிறார்.

அதனால்தானே நமது கொள்கைகளோடு மாறுபாடு கொண்ட சிவசேனா தலைவர் உத்தவ்தாக்கரே, " ஸ்டாலின் தான் இந்திய கூட்டணியின் தலைவராக நின்று வழிநடத்தும் வல்லமை மிக்கவர் என்று அண்மையில் புகழ்ந்தார்.

இந்த ஒரே மாதத்தில் காஞ்சிபுரம், திருச்சி, தஞ்சை, கும்பகோணம், சிவகங்கை, விழுப்புரம், மாமல்லபுரம், திருப்பத்தூர் எனப் பயணித்தபடியே இருக்கிறார்.

**சாலைகளில் சாமானியரைப் போன்றே பயணிக்கிறார்.**

19 நாட்களுக்கு முன்பு தனது கொளத்தூர் தொகுதிக்கு செல்ல சென்னை புளியந்தோப்பு வழியாக சென்றவரை கூட்டுறவு கடைகளில் வீட்டிற்குத் தேவையான பொருட்களை வாங்கும் பொதுமக்கள் எப்போதும் போலவே இயல்பாய் கையைத்து, வணங்கி நிற்கிறார்கள்.

கூட்டத்தோடு கூட்டமாய் நின்ற என்னையும், உடனிருந்த மொழிப்போர் தியாகி பழவேற்காடு கன்னிமுத்துவையும் அடையாளம் கண்டவராய் தனியான ஒரு கையசைப்பு எங்களுக்கு.

எப்படி முடிகிறது எம் தலைவா? இப்படிச் சுழன்றிட உம்மால்! என்றே ஒவ்வொரு தொண்டனையும் ஆச்சரியப்பட வைக்கிறார்.

கடந்த வாரம் ரூபாய் 5000 த்தை கலைஞர் மகளிர் உரிமைத் தொகையை அறிவித்துவிட்டு, அறிவாலயம் வந்தீரே, அங்கு ஆர்ப்பரித்து, தளபதி வாழ்க! தமிழ்நாடு முதலமைச்சர் வாழ்க! கழகத் தலைவர் வாழ்க! திராவிடப் பேரரசர் வாழ்க! என வாழ்த்து முழக்கங்களை தாய்மார்கள் எழுப்பினார்களே, அங்கு கூடியிருந்த கூட்டத்திலிருந்த ஒரு பெண்ணிடம், "பணத்தை, பார்த்து, சிக்கனமாக செலவு பண்ணுங்கள்" என்றீரே அதை உடனிருந்து பார்த்த நானும், எங்கள் திருவள்ளூர் கிழக்கு மாவட்டத் துணைச் செயலாளர் சகோதரி உமாமகேஸ்வரியும் உற்சாக மிகுதியில் உங்களுக்கு புத்தகங்களை தந்து வாழ்த்துச் சொல்லும் பெரும் பேறு பெற்றோமே,

"புண்ணியவான் ஸ்டாலின் தந்த ரூ.5000 புள்ளைக்கு பீஸ் கட்டிடுவேன் " என்று நன்றிப் பெருக்கில் கண்களை நனைத்த நடுத்தரக் குடும்பங்கள் எத்தனை! எத்தனை!

**நினைக்க, நினைக்க இனிக்கும் தமிழ்க்கரும்பே!**

திராவிட மாடல் மகளிர் ஆட்சி நடத்தும் எங்கள் திராவிடப் பெருவேந்தே, இன்னும் சிலநாளில் உங்களுக்கு 74 அகவை பிறக்கிறது.

**தி.மு.க.வின் வெள்ளிவிழா ஆண்டில் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சர். ( 1974 ).**

**பொன்விழா ஆண்டிலும் ( 1999 ) அவரே முதலமைச்சர்.**

**கழகத்தின் பவளவிழா ஆண்டில் நீங்கள் முதலமைச்சர்.**

**உங்களின் பவளவிழா ( 2027 ) அடுத்த ஆண்டிலும் நீங்கள் தான் தமிழ்நாட்டின் முதலமைச்சர்!**

இதை தமிழ்கூரும் நல்லுலகம், வாய்மையுரு தமிழரினம்,

நன்றி மறவா தாய்மார்கள்,

உங்கள் விழியசைவில் வினை முடிக்கும் தம்பியர் படை, இளைஞர் பட்டாளம், மொத்தத்தில் தமிழ்ச் சமூகம் வரும் தேர்தலில் உறுதிபடுத்தும்.

அதனால்,

முன்னதாகவே நாங்கள்,

திக்கெட்டும் புகழொலிக்கும், திராவிடப் பெருவேந்தர் எங்கள் தலைவர் தளபதியவர்கள் வாழ்க! என்றே, வாழ்த்துப் பண் பாடி நிற்கிறோம்!.

## திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. சகோதரர்


# எஸ்.விஸ்வநாதன் (எ)ரவி இயற்கை எய்தினார்!

*திருவள்ளூர், பிப். 27*

திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளரும் திருத்தணி சட்டமன்ற உறுப்பினருமான திருத்தணி எஸ்.சந்திரனின் சகோதரர் விஸ்வநாதன் (எ) ரவி அவர்கள் நேற்று (26.02.2026 வியாழக்கிழமை) காலை 8 மணி அளவில் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் உடல் திருத்தணி எஸ்.பி.ஐ. வங்கி அருகில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

அன்னாரின் இறுதி ஊர்வலம் அவரது இல்லத்தில் இருந்து இன்று (27.2.2026 வெள்ளிக்கிழமை) பகல் 12.00 மணி அளவில் புறப்பட்டு அங்குள்ள இடுகாட்டில் இறுதிச் சடங்குகள் நடைபெறுகின்றன என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக திமுக சார்பில் தெரிவித்துக் கொள்கிறோம்.





தமிழ்நாடு முதல்வர் கழகத் தலைவர் – மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் நல்லாட்சியின் 5 ஆண்டு சாதனைகளை விளக்கி எடுத்துரைக்க வெல்லும் தமிழ் பெண்கள் மகளிர் படையினரை ஊக்கப்படுத்தி காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் முட்டவாக்கத்தில் பாகம் எண்27ல் இருந்து பரப்புரையை தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.எஸ்.சுகுமார் மற்றும் மாவட்ட ஊராட்சி குழுத் துணை தலைவர் நித்யா சுகுமார் தொடக்கி வைத்தனர்.இந்நிகழ்வில் ஊராட்சி மன்ற தலைவர் தெய்வானை சுரேஷ்பாபு,ஒன்றிய குழு உறுப்பினர் வளர்மதி மனோகரன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.2.2026) தலைமைச் செயலகத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில், தீண்டாமை ஒழிப்புக்கு போராடிய போராளி இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்ட ஓட்டேரி மயானபூமி அமைந்துள்ள பிரிக்ளின் சாலைக்கு "இரட்டைமலை சீனிவாசன் சாலை" எனப் பெயர் சூட்டப்பட்டு, அதற்கான பெயர் பலகையை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மேயர் திருமதி ஆர். பிரியா. சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் குடும்பத்தினர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.2.2026) தலைமைச் செயலகத்தில் "தமிழ்நாடு விளையாட்டு கொள்கை – 2026" ஐ வெளியிட்டார். இந்நிகழ்வில் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை முதன்மை செயலாளர் சத்யபிரத சாகு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் துணைத் தலைவர் டாக்டர் அசோக் சிகாமணி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# திரு.வி.க.நகர் மண்டலத்தில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகள்!

## அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆய்வு மேற்கொண்டார்!

*சென்னை, பிப்.27-*

*இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் தலைவருமான பி.கே.சேகர்பாபு, திரு.வி.க. நகர் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் பெருநகர சென்னை மாநகராட்சி, சி.எம்.டி.ஏ. மற்றும் இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை நேற்று (26.02.2026) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, மேட்டுப்பாளையம் அருந்ததி நகர் விளையாட்டு மைதான மேம்பாட்டுப் பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.*

*பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் மாநகராட்சி மூலமாகவும், சி.எம்.டி.ஏ. மூலமாகவும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவ்வாறாக இன்று திரு.வி.க. நகர் மண்டலம், வார்டு 71க்குட்பட்ட மேட்டுப்பாளையம், அருந்ததி நகர் விளையாட்டு மைதானத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் ரூ.1.65 கோடி மதிப்பீட்டில் மேம்பாட்டுப் பணிகளை அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்து. பணிகள் அனைத்தும் திட்ட காலத்திற்குள் தரமாக மேற்கொண்டு முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரருக்கு ஆலோசனைகளை வழங்கினார்.*

*தொடர்ந்து, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள், வார்டு 71க்குட்பட்ட பொல்லேரி அம்மன் திருக்கோயிலில் இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டுமானப் பணியினைப் பார்வையிட்டு பணியினை விரைந்து முடித்திடவும், மேட்டுப்பாளையம், பி.என்.சி மில் குடியிருப்பு வாசிகளின் நீண்டநாள் கோரிக்கையை நிறை வேற்றிடும் வகையில் சி.எம்.டி.ஏ., பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னைக் குடிநீர் வாரியம் அலுவலர்கள் இணைந்து இப்பகுதியில் சாலை மேம்பாட்டுப் பணிகள், கழிவு நீர் செல்லும் வசதிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி கொடுத்திட திட்ட மதிப்பீடு தயார் செய்து விரைவில் பணிகளை தொடங்கிட சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.*

*பின்னர், பெரம்பூர் நெடுஞ்சாலை தெற்கில் உள்ள அருள்மிகு விநாயகர் திருக்கோயிலினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, கோயில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்வது குறித்து அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.*



*தொடர்ச்சியாக, பெரம்பூர் முரசொலி மாறன் பூங்காவில் சி.எம்.டி.ஏ. சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுப் பணி, பெரம்பூர் தொழில்நுட்பப் பூங்காவில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் ரூ.5.45 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுப் பணி ஆகியவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, பூங்காவில் விளையாட்டுத் திடல், நடைப்பயிற்சி கட்டமைப்பு, அடிப்படை வசதிகள் உட்பட பல்வேறு வசதிகளை ஏற்படுத்திட அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கி பணிகளை விரைந்து முடித்திட அறிவுறுத்தினார்.*

*இந்நிகழ்வுகளில், மேயர் திருமதி ஆர். பிரியா, திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர். கௌஷிக், மாமன்ற உறுப்பினர் திருமதி புனிதவதி எத்திராஜன், மாவட்ட வருவாய் அலுவலர் (சி.எம்.டி.ஏ.) டாக்டர் பால் பிரின்லி ராஜ்குமார், சி.எம்.டி.ஏ. கண்காணிப்புப் பொறியாளர் திரு.ராஜன் பாபு, மண்டல அலுவலர் ஜி.சொக்கலிங்கம், இந்து சமய அறநிலையத்துறை செயல் அலுவலர் திருமதி நித்தியகலா, உள்ளாட்சிப் பிரதிநிதி தமிழ் வேந்தன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# கே.பி.பி.சாமி

**பிப்ரவரி 27 (2020)**



**பாரம்பரிய தி.மு.க. குடும்பத்தில் பிறந்து, தனது மீனவப் பகுதியில் கழகம் வளர பாடுபட்டதோடு, மீனவ சமுதாயம் முன்னேற பாடுபட்டவர்.**

**திருவொற்றியூர் நகர இளைஞர் அணி துணை அமைப்பாளர், நகர துணைச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர், மாநில மீனவர் அணிச் செயலாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்து பணியாற்றியவர்.**

**2006, 2011 ஆகிய இரு முறை திருவொற்றியூர் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றதோடு, 2006ல் முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான அமைச்சரவையில் மீன்வளத் துறை அமைச்சராக பணியாற்றினார்.**

**கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**